46

திருநீலகண்டர்.



சிவநேசர் திருக்கூட்டம்.

திருநீலகண்டர்.



சிவநேசர் திருக்கூட்டம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முன்னுரை

தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணத்தில் உள்ள திருநீலகண்டர் வரலாற்றுப்பகுதி, இந்நூலில் வெளியிடப் பெற்றுள்ளது. தெய்வமணமும் சைவமணமும் பக்திச்சுவையும் இலக்கியச் சுவையும், இனிது கலந்து மிளிரும் சேக்கிழார் செய்யுள் சுவையை, அன்பர்கள் பருகும் பொருட்டும், சர்வசித்து ஆண்டு ஆடித் திங்களில் நடக்கும் சிவநேசர் திருக்கூட்டத்தின் திருமுறைப் போட்டியில் 16 வயதுமுதல் 25 வயது முடியும் மாணவர்கள் ஒப்புவித்தற் பொருட்டும் அச்சிடப் பெற்றுள்ளது.

இங்ஙனம்,

சர்வசித்து
ஆனிமீ கஉ

சிவநேசர் திருக்கூட்டத்தார்.

திருநீலகண்டர் வரலாறு.

சிதம்பரத்தில், குயவர் குலத்தில் ஒரு பெரியவர் தோன்றினர். அவர் ஸ்ரீ நடராஜப் பெருமானை வணங்குதலை வழக்கமாகக் கொண்டவர். சிவ பக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் சிறந்தவர். அறநெறியில் ஒழுகுபவர். அடியார்களுக்கு அன்புடன் தொண்டு செய்பவர். இல்லறத்தை இனிது நடாத்தினவர். சைவப்பொருளே மெய்ப் பொருளெனக் கொண்டவர். அவர் தமது குல முறைப்படி மட்கலங்கள் செய்து, விற்று வரும் பொருளால், வாழ்க்கை நடத்தி வந்தார். அடியார் களுக்குத் திருவோடு அளிப்பது அவர்தம் திருத் தொண்டு. சிவபெருமானுடைய திருநீலகண்டத்தி னிடத்து, அளவிலா மெய் அன்பு கொண்டு, எப்பொழுதும், **“திருநீலகண்டம், திருநீல கண்டம்”** என்று சொல்லுவார். சிவபிரான் கருணைத்திறத்தை வியந்து அவ்வாறு கூறுவது அவர் வழக்கம். அதனால், அன்பர்கள் அவரைத் **திருநீலகண்டர்** என அழைத்தனர்.

இப்படி, இச்சிவபணி செய்து வாழ்ந்து வரும் நாளில் அவரைக்காளைப்பருவம் அணுகியது. காதல் வேட்கை மிகுந்தவர் ஆயினர். அருந்ததியினும் சிறப்புமிக்க ஓர் அழகிய அணங்கை மணஞ் செய்து கொண்டு, மனை வாழ்க்கை நடாத்தினர். அவர் ஒரு நாள் ஒரு பரத்தைபால் அணைந்து, வீடு சேர்ந்தார். அதை அறிந்த அவர் மனைவியார் அவருடன் ஊடல் கொள்வாராயினர்; கூடுதலை ஒழித்துவிட்டனர்; கணவனுக்கு வேண்டிய பணி

விடைகளை மட்டும் செய்து வந்தனர். அப் பிணக்கை நீக்கிக்கொள்ளும் பொருட்டுத் திருநீல கண்டர் மனைவியை நயந்து நல்லுரை கூறி மருவ வேண்டினர். அப்பொழுது அவ்வம்மையார், கோபங்கொண்டு, "நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீல கண்டம்" என்று தொடக்கூடாதென ஆணையிட்டார் திருநீலகண்டத்தில் பற்று உடைய நாயனார் அவ்வாணை கேட்டதும், "அம்மாதையும் அவளின மாகிய மாதர் குலத்தையுமே, எம்மை என்று பொதுப்படக் கூறியமையால் தீண்டுவதில்லை" என விரதம் மேற்கொண்டார். இவ்விரதத்துடன் இரு வரும் வீட்டைவிட்டு நீங்காது கூடுதலின்றித்தனியே இருந்து, இந்நிலை பிறர் அறியாவண்ணம் வாழ்ந் தனர். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. இரு வருக்கும் இளமையும் நீங்கிற்று. மூப்பும் வந்தது. தளர்வும் எய்தினர். ஆனால், அரன்பால் பூண்ட அன்பு மட்டும் குறையவில்லை.

திருநீலகண்டர் திருத்தொண்டின் பெருமையை உலகுக்கு எடுத்து விளக்கச் சிவபெருமான் ஓர் அருட்சிவயோகியாராகி, கீளார் கோவணமும் வெண்ணீறும் அணிந்து, பூணூல் பூண்டு, பம்பைத் தலையுடன் புன்முறுவல் மிளிர, கையில் பிக்ஷா பாத் திரத்தை ஏந்திக்கொண்டு, நடந்து, நாயனார் வீட் டிற்கு வந்தார். நாயனார் அவரை வழிபட்டு, "அடியேன் செய்ய வேண்டிய தொண்டு யாது?" என்று கேட்டனர். சிவயோகியார் "அன்பனே இத்திருவோட்டை நீ பத்திரமாக வைத்திருந்து, நான் கேட்கும்போது தரவேண்டும். இது தனக்குத் தானே சமமானது. தன்னிடம் சேரும் எல்லாப் பொருளையும் தூய்மை செய்வது. பொன்னினும் மணியினும் போற்றுந்தகையது. இதை வாங்கி வை" என்று இயம்பினர். நாயனார் அதை அன்புடன் பெற்று, வீட்டில் ஒரு பக்கத்தில்

காப்புள்ள ஓரிடத்தில் வைத்துவிட்டு வந்தார். சிவ யோகியாரும் புறப்பட்டனர். நாயனரும் சிறிது தூரம் உடன் சென்று பிறகு விடை பெற்றுத் திரும்பினர். சிவயோகியாரும் சீர்மிகு பொன்னம்பலத்துள் புகுந்தருளினர்.

பல நாட்கள் சென்றன. பின்பு ஒருநாள் சிவ பெருமான் அத்திருவோடு, வைக்கப்பெற்ற இடத்தி னின்றும் மறையும்படி செய்தருளினர். மறுபடி யும் சிவயோகியாராக நாயனர் வீட்டிற்கு வந்தார். "நான் தந்த ஓட்டைத் தா" வென்று கேட்டார். நாயனர் உள்ளே சென்று ஓட்டைத் தேடிக் காணமல், திகைத்து நின்றார். சிவயோகியார் "ஏன் இவ்வளவு நேரம்? விரைவில் கொண்டு வா" என்று விளம்பினர். நாயனர், "எமது தந்தையே! நீர் தந்த ஓட்டைக் காணேம். எவ்வளவு முயன்றும் அகப்படவில்லை. அப்பழைய ஓட்டைவிட வேறெரு புதிய ஓடு தருகிறேன். பிழையை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சிவயோகியார் கோபத்துடன், "நன்றாயிருக்கிறது உன் பேச்சு! நான் தந்த மண்ணேடுதான் எனக்கு வேண்டும்; பொன்னேடானாலும் தேவையில்லை. நான் தந்த அவ்வோட்டைக் கொண்டு வருக" என்றனர். அடியவர் நடுக்கங்கொண்டு, அவரைப் பணிந்து, "தங்கள் திருவோடு காணமல் போய் விட்டது. நீண்ட நாள் உழைக்கக்கூடிய வேறெரு புதிய ஓடு தருகிறேன் என்றால் அதையும் வாங்கிக் கொள்ள மறுக்கிறீர்கள். உம்முடைய கோபவுரை என் உணர்வைக் கெடுத்துவிட்டது. நான் என்ன செய்வேன்" என்று வருந்தி நின்றார்.

அதற்குச் சிவயோகியார் "நான் உன்னிடம் அடைக்கலமாகத் தந்த பொருளைக் கவர்ந்து கொண்டு வஞ்ச நடிப்பு நடிக்கிறாய், பழிபாவத்திற்கு

நீ அஞ்சவில்லை. உன்னை நான் விடமாட்டேன். நான் வைத்த ஓட்டை வாங்கிக்கொண்டுதான் போவேன். இல்லாவிட்டால் எல்லோரும் அறிய உன்னைப்பிடித்துக்கொண்டு போவேன்." என்றார். அதற்கு நாயனர், "நான் அதைக் கவரவில்லை. மனத்தினாலும் கவர நினைக்கவில்லை. ஓடு மாயமாய்ப் போய்விட்டது. இனி நீர் சொல்வதை நான் கேட்கிறேன் சொல்லும்" என்றார். சிவயோகியார், "உன் மகனைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி, ஓடு காணுமல் போய்விட்டதென்று சொல்லிவிடு" என்று உரைத்தார். நாயனர், "எனக்குப் புதல்வன் இல்லையே" என்றார். சிவயோகியார், "உன் மனைவியைப் பற்றிச்சொல்" என்று கூறினார். நாயனர், "எங்களுக்குள் ஒரு சபதம் உண்டு. அவள் கையைப் பிடித்து மூழ்க முடியாது. நானே மூழ்கிச் சத்தியம் செய்கிறேன்" என்றார். சிவயோகியார் கோபங்கொண்டு, "என் ஓட்டைத் தரவும் மறுக்கிறாய்! மனைவியைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கவும் இசைகின்றாயில்லை! நீ மனத்திண்மையோடு இருக்கிறாய்! தில்லைவாழ் அந்தணர்கள் கூடியுள்ள பேரவையில் என் வழக்கைச் சொல்லி, முறையிடப் போகிறேன்" என்று செல்வாராயினர். நாயனரும் உடன் சென்றார்.

சிவயோகியார், அந்தணர் முன்னர் நிகழ்ந்ததைச் சொன்னார். திருநீலகண்டரும் நடந்ததைத் தெரிவித்தார். இருவர் மொழியையும் கேட்ட அந்தணர்கள், நாயனரைப் பார்த்து, இவருடைய ஓட்டை நீர் இழந்தீராயின், இவர் விரும்பும் வண்ணம் மனைவியைப்பற்றி மூழ்குதலே நியாயம்." என்று தீர்ப்புக் கூறினர். தனக்கும் மனைவிக்கும் உள்ள தீண்டாமையை நாயனர் வெளியிடமுடியாதவராய், "பொருத்தமான முறை

யில் குளத்தில் மூழ்குகிறேன்." என்று சொல்லிச் சிவயோகியாரும் தாமும் வீட்டிற்குச்சென்று, அவ்வம்மையாரை அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சுரத்திற்கு முன் உள்ள திருக்குளத்தை அடைந்தனர். ஒரு மூங்கில் தண்டின் ஒரு முனையை மனைவியார் பிடித்துக்கொள்ள, மற்றொரு முனையைத் தாம் பிடித்துக்கொண்டு அக்குளத்தில் மூழ்கினார். அப்பொழுது அச்சிவயோகியார், "உன் மனைவி கையைப்பற்றி மூழ்க வேண்டும்" என்றார். நாயனார் அவ்வாறு செய்ய இயலாத சபதத்தை யாவரும் அறிய விளக்கமாகச் சொல்லி மூழ்கிக் கரை ஏறினார்.

கரை ஏறிய அவ்விருவர் முதுமையும் நீங்கிற்று. இளமைக் காட்சி பொலிந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அக்காட்சி கண்டவர்கள் அச்சிவயோகியாரைக் காணவில்லை. "இது என்ன மாயம்" என்று நாயனாரும் மருண்டு நின்றனர். சிவபெருமான் உமையம்மையுடன் ஆகாயத்தில் விடை மீது காட்சி தந்தருளினார். திருநீலகண்ட நாயனாரும் அவர்தம் திருந்திய மனைவியாரும் இறைவனை வணங்கிப் போற்றி, இன்ப வெள்ளத்தில் திளைத்தனர். சிவபெருமான் அவர்களைப்பார்த்து, "ஐம்புலன் வெற்றி கொண்ட விழுமிய அன்பர்களே! இவ்விளமை என்றும் நீங்காமல் நம்பாலிருங்கள்!" என்று அருள் செய்து எழுந்தருளினார். இருவரும் சிவலோகமடைந்து சிவபோகத்தைத்துய்த்துப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வாராயினர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருநீலகண்டர் புராணம்.

காப்பு

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர் குலத்து வந்தார்.
மாதொரு பாகம் நோக்கி,
மன்னுசிற் றம்ப லத்தே,
ஆதியும் முடிவு மில்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்,
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தில் மிக்கார், 1

பொய்கடிந் தறத்தின் வாழ்வார்,
புனற்சடை முடியார்க் கன்பர்,
மெய்யடி யார்கட் கான
பணிசெயும் விருப்பில் நின்றார்,
வையகம் போற்றும் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்,
சைவமெய்த் திருவின் சார்வே
பொருளெனச் சாரும் நீரார். 2

அளவிலா மரபின் வாழ்க்கை
மட்கலம் அமுதுக் காக்கி,
வளரிளம் திங்கட் கண்ணி
மன்றுளார் அடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க
ஓடளித் தொழுகும் நாளில்,
இளமை மீதூர இன்பத்
துறையினில் எளியர் ஆனார். 3

அவர் தங்கண் மனைவி யாரும்
அருந்ததிக் கற்பில் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர்
பொங்குநஞ் சுண்ண யாம்செய்
தவமின்று தடுத்த தென்னத்
தகைந்துதான் தரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத்
திருநீல கண்டம் என்பார். 4

ஆனதங் கேள்வர் அங்கோர்
 பரத்தைபால் அணைந்து நண்ண,
மானமுன் பொருது வந்த
 ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே
 உடனுறைவு இசையா ரானார்
தேனலர் கமலப் போதில்
 திருவினும் உருவம் மிக்கார். 5

மூண்டஅப் புலவி தீர்க்க
 அன்பனார் முன்பு சென்று
பூண்தயங் கிளமென் சாயல்
 பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி
 மெய்யுற அணையும் போதில்
“தீண்டுவீ ராயின் எம்மைத்
 திருநீல கண்டம்” என்றார். 6

ஆதியார் நீல கண்டத்து
 அளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட
 பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி
 “எம்மைஎன் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்தன்
 மனத்தினும் தீண்டேன்” என்றார். 7

கற்புறு மனைவி யாரும்
கணவனார்க் கான எல்லாம்
பொற்புறு மெய்யு றாமல்
பொருந்துவ போற்றிச் செய்தே
இற்புறம்பு ஒழியா தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
அயலறி யாமை வாழ்ந்தார். 8

இளமையில் மிக்கு ளார்கள்
இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆணை போற்றி
ஆண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி இளமை நீங்கி
வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு
தம்பிரான் திறத்துச் சாயார். 9

இந்நெறி ஒழுகும் நாளில்
எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் தானும்
தொண்டரை விளக்கங் காண
நன்னெறி இதுவாம் என்று
ஞாலத்தோர் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டு மாற்றால்
அருட்சிவ யோகி யாகி, 10

நீளொடு கோவணம் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும் 11

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையில் நண்ணினர். 12

நண்ணிய நவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றிசெய்து
எண்ணிய உவகையால் எதிர்கொண் டேத்தினர். 13

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்று
உறையுளில் அணைந்துபேர் உவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். 14

"எம்பிரான்! யான்செயும் பணிஎது" என்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர்நா யகனும் "இவ் வோடுன் பால்வைத்து
நம்பி! நீ தருகநாம் வேண்டும் போ"தென்று. 15

"தன்னைஒப் பரியது தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது
இன்னதன் மையதிது வாங்கு நீ"என. 16

தொல்லைவேட் கோவர் தங் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்டு
ஒல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்துவந்து இறையை எய்தினர். 17

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார். 18

சாலநாள் கழிந்த பின்பு
தலைவனார் தாம்முன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக்
குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை என்றும்
திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட
முன்புபோல் மனையில் வந்தார். 19

வந்தபின் தொண்டனாரும்
எதிர் வழிபாடு செய்து
"சிந்தைசெய் தருளிற்று எங்கள்
செய்தவம்" என்று நிற்ப,
"முந்தைநாள் உன்பால் வைத்த
மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில்" என்றான் எல்லாம் தான்வைத்து
வாங்க வல்லான், 20

என்றவர் விரைந்து கூற
இருந்தவர் ஈந்த ஓடு
சென்று முன்கொணர்வான் புக்கார்
கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்
தேடியும் காணார் மாயை
ஒன்றுமங்கு அறிந்திலாதார்
உரைப்பது ஒன்றின்றி நின்றார். 21

மறையவனாகி நின்ற
மலைமகள் கேள்வன் தானும்
உறையுளில் புக்கு நின்ற
ஒருபெருந் தொண்டர் கேட்ப,
"இறையிலிங் கெய்தப் புக்காய்
தாழ்த்ததென்" என்ன வந்து
கறைமறை மிடற்றினானைக்
கைதொழுது உரைக்கலுற்றார். 22

"இழையணி முந்நூல் மார்பின்
எந்தை! நீர் தந்துபோன
விழைதரும் ஓடுவைத்த வேறிடம்
தேடிக் காணேன்
பழையமற் றதனில் நல்ல பாத்திரம்
தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெரும"
என்றிறைஞ்சி நின்றார். 23

சென்னியால் வணங்கி நின்ற
தொண்டரைச் செயிர்த்து நோக்கி,
என்னிது மொழிந்த வா நீ
யான்வைத்த மண்ணோ டன்றிப்,
பொன்னினால் அமைத்துத் தந்தாய்
ஆயினும் கொள்ளேன் போற்ற
முன்னை நான் வைத்த ஓடே கொண்டுவா"
என்றான் முன்னோன். 24

கேடிலாப் பெரியோய்!
என்பால் வைத்தது கெடுதலாலே
நாடியும் காணேன் வேறு
நல்லதோர் ஓடு சால
நீடு செல்வது தான் ஒன்று தருகின்றேன்
எனவும் கொள்ளாது
ஓடிநின் றுரைத்த தென்றன்
உணர்வெலாம் ஒழித்த தென்ன. 25

"ஆவதென் உன்பால் வைத்த
அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து
பழிக்கு நீ ஒன்றும் நாணாய்!
யாவரும் காண உன்னை
வளைத்துநான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன்" என்றான்
புண்ணியப் பொருளாய் நின்றான். 26

"வளத்தினல் மிக்க ஒடு வெளவினேன்
அல்லேன் ஒல்லை
உளத்தினும் களவி லாமைக்கு
என்செய்கேன் உரையும்" என்னக்
களத்துநஞ் சொளித்து நின்ருன்
"காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினில் மூழ்கிப் போ"
என் றருளினன் கொடுமை இல்லான். 27

"ஐயர்நீர் அருளிச் செய்த
வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வன் இல்லை
என்செய்கேன் புகலும்" என்ன,
"மையறு சிறப்பின் மிக்க
மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு
மூழ்குவாய்" எனமொ ழிந்தார். 28

கங்கைநதி கரந்தசடை
கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண்விடை யவரருள
வேட்கோவர் உரைசெய்வார்
"எங்களிலோர் சபதத்தால்
உடன்மூழ்க இசைவில்லை
பொங்குபுனல் யான்மூழ்கித்
தருகின்றேன் போதும்"என. 29

"தந்தருமுன் தாராதே
கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்ச்செங் கைப்பற்றி
அலைப்புனலில் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய்!
தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த பேரவையில்
மன்னுவன்யான்" எனச்சென்றார். 30

நல்லொழுக்கம் தலைநின்றார்
நான்மறையின் துறைபோனார்
தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த திருந்தவையில்
எல்லையிலான் முன்செல்ல
இருந்தொண்ட ரவர்தாமும்
மல்குபெருங் காதலினால்
வழக்கின்மே லிட்டணைந்தார். 31

அந்தணனும் எந்தைபிரான்
அருமறையோர் முன்பகர்வான்
"இந்தவேட் கோவன்பால்
யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல்
தன்மனைவி கைப்பற்றி
வந்துமூழ் கியுந்தாரான்
வலிசெய்கின்றான்" என்றார். 32

நறைகமழுஞ் சடைமுடியும்
நாற்றோளும் முக்கண்ணும்
கறைமருவுந் திருமிடறும்
கரந்தருளி எழுந்தருளும்
மறையவனித் திறம்மொழிய
மாமறையோர் உரைசெய்வார்
"நிறையுடைய வேட்கோவர்!
நீர்மொழியும்" புகுந்ததென. 33

"நீள்நிதியாம் இது என்று
நின்றஇவர் தரும்ஓடு
பேணிநான் வைத்த இடம்
பெயர்ந்துகரந் ததுகாணேன்
பூணணிநூல் மணிமார்பீர்!
புகுந்தபரி சிது" என்று
சேணிடையுந் திங்கடையாத்
திருத்தொண்டர் உரைசெய்தார். 34

திருவுடை அந்த ணாளர்
செப்புவார் "திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர்தாம் வைத்த
ஓட்டினைக் கெடுத்தீ ராகில்
தருமிவர் குளத்தில் மூழ்கித்
தருகஎன்று உரைத்தா ராகில்
மருவிய மனைவியோடு மூழ்குதல்
வழக்கே" என்றார். 35

அருந்தவத் தொண்டர் தாமும்
அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத்
தீண்டாமை செப்ப மாட்டார்
"பொருந்திய வகையால் மூழ்கித்
தருகின்றேன் போதும்" என்று
பெருந்தவ முனிவரோடும் பெயர்ந்து
தம் மனையைச் சார்ந்தார். 36

மனைவியார் தம்மைக் கொண்டு
மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவும்
திருப்புலீச் சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி
நண்ணித்தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின்
இருதலை பிடித்துப் புக்கார். 37

தண்டிரு தலையும் பற்றிப்
புகுமவர் தம்மை நோக்கி
வெண்திரு நீற்று மூண்ட
வேதியர் "மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கிர்" என்னக்
கூடாமை பாரோர் கேட்பப்
பண்டுதம் செய்கை சொல்லி
மூழ்கினர் புழுகி லாதார். 38

வாவியின் மூழ்கி ஏறுங்
கணவரும் மனைவியாரும்
மேவிய மூப்பு நீங்கி
விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும்
சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள
மூழ்குவார் போன்று தோன்ற. 39

அங்கிலை அவரைக் காணும்
அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத
முதல்வரைக் கண்டா ரில்லை
"இங்கிலை இருந்த வண்ணம்
என்" என மருண்டு நின்றார்.
துன்னிய விசும்பி னூடு
துணையுடன் விடைமேற் கண்டார். 40

கண்டனர் கைக ளாரத்
தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள்
அன்பர்தம் பெருமை நோக்கி
விண்தரும் பொலிவு காட்டி
விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாரும்
தொழுதுடன் போற்றி நின்றார். 41

மன்றுளே திருக்கூத் தாடி
    அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும்
    தேவர்கள் தேவர் தாமும்
"வென்றஐம் புலனல் மிக்கீர்!
    விருப்புடன் இருக்க நம்பால்
என்றுமிவ் விளமை நீங்காது"
    என்றெழுந் தருளி னாரே. 42

விறலுடைத் தொண்ட னாரும்
    வெண்ணகைச் செவ்வாய் மென்தோள்
அறலியற் கூந்த லாளாம்
    மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து
    சிவலோக மதனை எய்திப்
பெறலரு மிளமை பெற்றுப்
    பேரின்பம் உற்றா ரன்றே. 43

அயலறி யாத வண்ணம்
    அண்ணலார் ஆணை உய்த்த
மயலில்சீர்த் தொண்ட னாரை
    யானறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாட நீடும்
    பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல்பெற் பகையார் செய்த
    திருத்தொண்டு செப்ப லுற்றேன். 44

அரும் பதவுரை.

காப்பு {
புராணம்—வரலாறு.
வேணியன்—சடையை உடையவன்.
அலகில்—அளவில்லாத.

1 வேதியர்—அந்தணர். தில்லை—சிதம்பரம்.
மூதூர்—பழமையானஊர். வேட்கோவர்—குயவர்.
வந்தார்—தோன்றினர்.
மாதொருபாகம்—அம்மைஇருக்கும் இடப்பாகம்.
மன்னு—நிலைபெற்ற. சிற்றம்பலம்—ஞானவெளி
கழல்—சிலம்பணிந்த திருவடி.

2 கடிந்து—நீக்கி. புனல்—நீர், கங்கை. பணி—தொண்டு.
வையகம்--உலகம். மனையறம்—இல்லறம்.
புரிந்து—செய்து. சைவமெய்த்திருவின்சார்வு—சைவ
உண்மைத் திருவருட்செல்வத்தின் சார்பு.
பொருள்—உண்மைப்பொருள். நீரார்—குணத்தை
உடையவர்.

3 மரபு—குலம். மட்கலம்—மண்பாத்திரம்.
அமுதுக்கு—உணவிற்கு, ஜீவனத்திற்கு.
மன்றுளார்—சபாநாயகர். மல்க—பெருக, நிறைய.
ஓடு—திருவோடு. இளமைமீதூர—இளமைச்செவ்வி
மிக, முதிர, காளைப்பருவம் வர.
இன்பத்துறை—சிற்றின்பநெறி.
எளியரானார்—வயப்பட்டார்.

4 அவர்தங்கள்—அவருடைய. அருந்ததி—வசிட்டர்
மனைவி, கற்பிற்சிறந்தவள். புவனம்—உலகம்.
ஐயர்—தலைவர், சிவபிரான். தகைத்து—தடுத்து.
தான்—இங்கு, கண்டம்.

5 கேள்வர்—கணவர். பரத்தை—விலைமாது.
மடல்—பிணக்கு. உடனுறைவு—சேர்க்கை.
அலர்—ததும்பும். கமலம்—தாமரை. போது—மலர்.
திரு—இலக்குமி. உருவில்—அழகில்.

6 மூண்ட—உதித்தெழுந்த. புலவி—ஊடல்.
அன்பனார்—காதலர், திருநீலகண்டர்.
பூண்—அணிகலன். தயங்கு—விளங்குகின்ற.
இரந்து—கெஞ்சி. மெய்—உடல்.

7 ஆதியார்—முழுமுதற்பெருமான். ஆர்வம்—ஆசை.
பேதியா—மறுக்கமுடியாத. ஏதிலார்—அயலார்.

8 பொற்பு—அழகு. பொருந்துவ—பொருந்தியசெய்கைகளை. இற்புறம்புஒழியாது—வீட்டைவிட்டு வெளியே போகாமல். வேறுவைகி—தனித்து வசித்து.
அற்பு—அன்பு. அயல்—அயலார்.

9 போற்றி—காத்து. தம்பிரான்—தமது தலைவன், சிவபிரான். சாயார்—குறையமாட்டார்.

10 எரி—நெருப்பு. மின்—ஒளி.
விளக்கம்காண—சோதிக்க.
ஞாலத்தோர்—உலகத்தார்.

11 கீள்—அரைப்பட்டி, இடுப்புக்கயிறு.
சாத்தி—அணிந்து. வாள்—ஒளி.
திருமுண்டம்—திரிபுண்டரம், முக்கீற்று வடிவமாகப் பூசிய நீறு.

12 கரந்திட—மறைய. பம்பை—பரட்டைத்தலை.
கதிர்—ஒளி. முறுவல்—புன்சிரிப்பு.
இடும்பலிப்பாத்திரம்—பிச்சை இடப்பெறும் [திருவோடு
நண்ணினார்—அடைந்தார்.

13 உவகை—மகிழ்ச்சி.

14 பிரான்—தலைவன். உறையுள்—வீடு. கூர்ந்திட—மிக

15 வம்பு—வாசனை. உலாம்—உலவுகின்ற.
வள்ளல்—அருட்கொடையாளி. உம்பர்—தேவர்.
நம்பி—ஆடவரிற் சிறந்தவனே, நம்பிக்கையர்க.

16 தன்நலத்துறை—தன்னிடத்தில்.
துன்னிய—பொருந்திய.

17 தொல்லை—பழமையான. மல்கு—நிறைந்த.
ஒல்லையில்—விரைவில். மருங்கு—பக்கம்.
காப்புறும் எல்லை—காவல் மிக்க இடம்.

18 நித்தன்—அழிவில்லாதவன். உய்த்து—செலுத்தி, வழிவிட்டு. அத்தர்—ஐயர், சிவபிரான்.

19 சாலநாள்—பலநாள். கோலம்—அழகு.
குறியிடத்து—வைத்த குறிப்பிட்ட இடத்திலிருந்து.
அகல—நீங்க. சீலம்—ஒழுக்கம்.
வாலிதாம்—உண்மையான, தூய்மையான

20 சிந்தை செய்தருளிற்று—திருவுளங்கொண்டு இங்கே எழுந்தருளினீர்கள்.
முந்தை—முன். மொய்—நிறைந்த.
எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்—யாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் ஆற்றலுடைய சிவபிரான்.

21 இருந்தவர்—பெரிய தவமுடைய சிவயோகியார்.
கொணர்வான்—கொணரும் பொருட்டு.
நேடியும்—தேடியும்.

22 மறையவன்—அந்தணன், உண்மை வடிவை மறைத்து வந்தவன்.
மலைமகள்—பார்வதி இறையில்—சீக்கிரத்தில்.
புக்காய்—புகுந்தவனே!
கறைமறைமிடற்றினன்—நஞ்சு ஒளித்த கண்டத்தை உடையவன்.

23 முந்நூல்—முப்புரி நூல்.
விழைதரும்—விரும்பத்தக்க.
வைத்த வேறிடம்—வைத்த இடத்தும் வேறிடங்களிலும். இறைஞ்சி—வணங்கி.

24 சென்னி—தலை. செயிர்த்து—கோபித்து.
மொழிந்தவா—மொழிந்தவாறு, சொன்னவிதம்.
போற்ற—காப்பாற்ற.
முன்னோன்—முதல்வன்.

25 கெடுதலால்—காணாமற்போனதால்.
நாடியும்—தேடியும்.
நீடு செல்வது—நீண்டநாள் உழைப்பது.
ஊடி—மாறுபட்டுக் கோபித்து.

26 வெளவி—கவர்ந்து. பாவகம்—வஞ்சக நடிப்பு.
ஒன்றும்—சிறிதும்.
வளைத்து—சூழ்ந்து பிடித்துக் கொண்டு.

27 ஒல்லை—சிறிதும், விரைவில். களம்—கண்டம்.

28 பொய்யில் சீர்ப்புதல்வன்—நான் பொய்யில்லாதவன் என்பதை விளக்கும் சிறப்புடைய மகன்.
மை — குற்றம். மொய் யலர் வாவி — நெருங்கிய மலர்கள் சூழ்ந்த குளம்.

29 வெங்கண்—கோபமுடைய. அருள—சொல்ல.
சபதம்—சத்தியம். போதும்—வாரும், அமையும்.

30 தாராதே—தராமல்.
கொள்ளாமைக்கு—நீர் கவர்ந்து கொள்ளாமைக்கு.
அம்—அழகிய. சிந்தை வலித்திருக்கின்றாய்—மனம் தடித்திருக்கின்றாய். போரவை—போம்பலம்.
மன்னுவன்—செல்வேன், இருப்பேன்.

31 தலைநின்றார்—சிறந்து விளங்கினார்.
துறைபோனார்—கரைகண்டவர், வல்லவர்.
திருந்தவை—செவ்விய நீதி வழங்கும் சபை.
எல்லையிலான்—அளவற்றவன். இரும்—பெரிய.
வழக்கின் மேலிட்டு—வழக்கின் மேலிடப்பட்டவராய் பிரதிவாதியாக.

32 எந்தை—எமது தந்தை. தந்தொழியான்—கொடுத்து விடான். கெடுத்தானேல்—இழந்து விட்டானாயின்.
வலி—வன்கண்மை.

33 நறை—மணம். நிறை—சால்பு. புகுந்தது—நிகழ்ந்தது.

34 பரிசு—தன்மை. சேணிடையுந்தீங்கடையா—தம்மைத் தீமை என்பது வெகு தூரத்திலும் அணுக முடியாத!

35 தருமிவர்—ஓட்டைத்தந்த இவர். வழக்கு—நியாயம். ஒழுங்கு.

36 செப்பமாட்டார்—சொல்லமுடியாதவராகி.

37 சினம்—கோபம். திருப்புலீச்சுரம்—சிதம்பரத்தில் உள்ள இளமையாக்கினர் கோயில்.
நளை—தேன்பொருந்திய. புனை—கைக்கொண்ட.
மணி—அழகிய. வேணுத்தண்டு—மூங்கிற்கோல்.

38 கூடாமை—முடியாமை. பண்டு—பழைய.

39 மேவிய—பொருந்திய. தெய்வப்பூ—கற்பகப்பூ.

40 கண்டார்—கண்டஉலகோர். முன்னிலை—முன்னர்.
நின்றார்—நின்றவராகிய நீலகண்டர்.
விசும்பினூடு—ஆகாயத்தின்வழியே.
துணையுடன்—உமையுடன்.

41 அண்டர்—தேவர்.

42 மிக்கீர்—மேம்பட்டவர்களே. இருக்க—இருப்பீராக

43 விறல்—வலிமை, பக்திவைராக்கியஉறுதி, புலனைவென்ற வீரம். வெண்ணகை—வெள்ளிய பல்வரிசை.
செவ்வாய்—சிவந்தவாய். அறலியல் — கருமணல் ஒழுக்குப் போன்ற. திறல்—வலிமை.

44 உய்த்த—காத்த. மயல்—மயக்கம். புயல்—மேகம்.
பூம்புகார்—காவிரிப்பூம்பட்டினம்.
இயற்பகையார்—இயற்பகை நாயனர்.